1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சிந்தி பசு இன அபிவிருத்திக்காக சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் சிந்தி இன பசுக்கள் உற்பத்தி செய்கிற திட்டம் மேற்கொள்ளப்படும்.

சீட்டுக் கம்பெனிகள்

* 120 வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சீட்டுக் கம்பெனிகள், வாடிக்கையாளர்களிடம் மோசடி செய்ததற்காக எந்தெந்த கம்பெனிகள்மேல் 1974-ம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒரு விவர அறிக்கை @ பேரவை முன்வைக்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப்: இந்த அறிக்கையை பார்த்தால் மிகப் பயங்கரமாக இருக்கிறது. ஒரு ஆண்டில் மட்டும் 91 கம்பெனிகள் மீது மோசடிக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ கம்பெனிகள்மீது மோசடிக் கேஸ்கள் பதிவு செய்யப் படாமல் இருக்கின்றன என்பது மட்டுமல்ல, பல புகார்கள் வந்துகொண்டே இருக்கின்றன. மாயவரத்தில் உள்ள சம்பத் பைனன்ஸில் லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்திருக்கிறார்கள். இப்படி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. கே. எ. வகாப்: இப்படி சீட்டுக் கம்பெனிகள் வைத்து மோசடி செய்கிறவர்கள்மீது மிசா சட்டத்தை உபயோகப் படுத்தி அவர்களைக் கைது செய்து ஏமாற்றப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய பணத்தை டெப்பாசிட் தொகையிலிருந்து திருப்பித் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பல தவறுகள் நடந்துகொண்டிருப்பதாகக் குறிப்பிலிருந்து தெரிகிறது. டோட்டல் நம்பர் ஆப் அபன்ஸஸ்

@ 296-301-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 599. 470 கேஸ்கள் கோர்ட் மூலம் தண்டிக்கப் பட்டிருக்கின்றன. ஒரே ஒரு வழக்குதான் விடுதலை செய்யப் பட்டது. பாக்கி நீதிமன்றத்தில் இருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the increasing frauds in the Chit Companies, is there any proposal to bring in a comprehensive legislation for the control and regulation of the chit funds?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற கூட்டத் தொடரில் ஒரு சட்டம் கொண்டுவந்தோம். டெப்பாஸிட் அதிகமாகக் கட்டவேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தோம். உயர்நீதி மன்றத்தில் இருந்து தற்போது இதற்கு தடை வாங்கப்பட்டிருக் கிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: இப்போது கிராமங்களில் சீட்டுக்கள் பிடிக்கும் நிலையில் சாதாரண பாமர மக்களும், விவசாயிகளும் ஏமாற்றப்படுகிறார்கள். அதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தாலுக்கா அளவில் அவற்றைக் கண்டுபிடித்து தண்டனை அளிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதுபோன்று தவறு செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக தனிப் பிரிவு கள் எல்லாம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்று தவறுகள் செய் பவர்களை அல்லது தவறு நடைபெறுவதை எந்தளவிற்கு தண்டிக்கமுடியும் என்பது இருக்கிற சட்டப்படிதான் செய்ய முடியும். சமீபத்தில் மத்திய அரசு கூட இதை நாட்டுடைமை யாக்க வேண்டும் என்ற செய்தியை வெளியிட்டிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்தேன். அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: எண்ணற்ற சீட்டுக் கம்பெனி களால் மோசடிகள் நடத்தப்படுகின்றன என்ற காரணத்தால் சீட்டுக் கம்பெனிச் சட்டத்தை, கட்டுப்படுத்த வேண்டுமென்று கொண்டுவந்தோம். அதை அமல்படுத்துவது கிடையாது. ஒழுங்காக இன்ஸ்பெக்டர்களைப் போட்டு, என்னென்ன எப்படி எப்படி நடக்கின்றன என்பதை காலாகாலத்தில் பார்ப்பதில்லை.

1975 அக்டோபர் 29]

அதை சரிவர அமல்படுத்தாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட மோசடிகள் பெருத்து வருகின்றன. சட்டம்போடுவது மட்டும் போதாது. அதை அமல்படுத்த என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன? இன்ஸ்பெக்டர்களைப் போட்டிருக்கிறார்களா? அவர்கள் பீரியாடிக்கலாக எவ்வளவு இன்ஸ்பெக்ஷன் செய்திருக்கிறார்கள் என்பதற்கான ரிக்கார்ட்ஸ் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 599 வழக்குகளில் 470 தண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுதான் விடுதலை செய்யப்பட்டிருக்கிறது. நமது போலீஸ் துறை நல்ல நிபுணத்துவத்தோடு நல்லமுறையில் விசாரணை செய்து நன்கு செயலாற்றி வருகிறது.

திரு. சு. துரைசாமி: இருபது கம்பெனிகள் கோவை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் உமா இன்வெஸ்ட்மென்ட் போன்றவை—கேரளாவைச் சேர்ந்த பலர் கோவைக்கு வந்து சீட்டுக் கம்பெனிகள் ஆரம்பித்து சாதாரண தொழிலாளர்களை எல்லாம் ஏமாற்றி மோசடி செய்கிறார்கள். அவர்களைத் தண்டிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: உமா சீட்டுக் கம்பெனி பம்பாய் ஹைகோர்ட்டில் தடை வாங்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: நம் சட்டத்தில் பத்தாயிரம் ரூபாய் டெப்பாஸிட் கட்டினால் சீட்டுக் கம்பெனி நடத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் ரூபாயைக் கட்டிவிட்டு பாக்கிப் பணத்தை வசூலித்துக் கொண்டு போகக்கூடிய அளவிற்கு நம் சட்டத்தில் நிலைமை இருக்கிறது. இதனால்தான் இவ்வளவு மோசடிகள் நடந்திருக்கின்றன. ஆகவே, இந்தச் சீட்டுக் கம்பெனிகளையே க்ளோஸ் செய்துவிட்டு சீட்டுகள் நடத்த விரும்புகிறவர்களை பாங்குகளோடு சேர்த்து பாங்குகளிலிருந்து நடத்துவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சீட்டுத் தொகையை விட இரண்டு மடங்கு. மூன்று மடங்கு, நான்கு மடங்கு டெப்பாஸிட் தொகை கட்டவேண்டும் என்று சட்டம் கொண்டு வந்திருக்

கிறோம். ரூ. 40,000 என்றால் ரூ. 1,60,000 கூட கட்டக்கூடிய நிலைமை சட்டத்தில் இருக்கிறது. ஹைகோர்ட் தடை செய்திருப்பதால் அமல் நடத்தவில்லை. வழக்கு முடிந்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும்.

திரு. கே. எ. வகாப்: மோசடிகள் நடப்பது அரசுக்கு குறைவாகத் தெரிந்திருந்தாலும் இப்போது கிராமங்களில் ரெஜிஸ்தர் செய்யப்படாத சீட்டுக் கம்பெனிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்க போலீஸுக்கு உத்தரவு போட்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ரெஜிஸ்தர் செய்த வழக்குகள் 599. ரெஜிஸ்தர் செய்யாதவை 257.

கோவை நகராட்சிக்கு நிதி வழங்கல்

*121 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகர அபிவிருத்திக்கு நகர் அபிவிருத்தி நிதியின் கீழ் உதவி புரியுமாறு கோவை நகராட்சி மன்றம் மாநில அரசுக்கு வேண்டுகோள் ஏதேனும் அண்மையில் விடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) கோவை நகர் மன்றம் தனது 30—4—1975-ம் தேதிய 251-ம் எண் தீர்மானத்தில் நகர் அபிவிருத்தி நிதியிலிருந்து கோவை நகரமைப்புத் திட்டத்திற்காக ரூபாய் 2.00 கோடி ஒதுக்கும்படி கேட்டிருக்கிறது.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: கோவை நகர அபிவிருத்திக்காக அங்கிருந்து கோரப்பட்ட தொகை இரண்டு கோடி என்று குறிப்பிட்டார்கள். அந்த இரண்டு கோடி ரூபாய் எந்தெந்த இனங்களுக்காக முக்கியமாக செலவழிக்கக் கோரப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அது மிகப் பெரிய நீண்ட பட்டியல். ஆகவே உறுப்பினர் அவர்களுக்கு தேவைப்பட்டால் அதை அவை முன்னர் வைக்கத் தயாராயிருக்கிறேன்.